# விசாரணையில் பவுல்!

# [24:1-23]

*உள்ளூர் சபையொன்றிற்கு சுவிசேஷகன் ஒருவர் தேவைப் பட்டார். சபையின் மூப்பர்களில் ஒருவர், சபையார் எப்படிப் பட்ட பிரசங்கியாரைப் பெற விரும்பினார்கள் என்று கண் டறிய முயற்சி செய்தார். இதைச் செய்வதற்கு, அவர் ஒரு விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்பட்டதாக எண்ணும் வகையில் தாமே ஒரு கடிதத்தை உருவாக்கி அதை சபையாரி டத்தில் வாசித்துக் காட்டினார்:*

*நற்குணம் கொண்டோரே,*

*பிரசங்கியார் ஒருவர் உங்களுக்குத் தேவை என்பதைப் புரிந்து கொண்டு, நான் அதற்கு விண்ணப்பிக்க விரும்பு கின்றேன்.*

*நான் பெற்றுள்ள பல தகுதிகளை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று நம்புகின்றேன். வல்லமையோடு பிரசங்கிக்கவும், எழுத்தாளர் என்ற வகையில் சிறிது வெற்றியடையவும் நான் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். நான் ஒரு நல்ல ஒருங்கிணைப்பாளர் என்று சிலர் கூறுகின்றார்கள். நான் சென்றுள்ள இடங்கள் பலவற்றில் நான் சிறந்த முன்னோடியாய் இருந்துள்ளேன்.*

*இருப்பினும், சிலர் எனக்கெதிரான சில விஷயங்கள் கொண்டிருக்கின்றார்கள். எனக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட வயதாகின்றது. எனது உடல் நலம் மிகச் சிறந்ததென்று கூற முடியாது, ஆனால் நல்ல ஊழியம் நடைபெறும்படி நான் பார்த்துக் கொள்கிறேன். ஓரிடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நான் எவ்விடத்திலும் பிரசங்கித்த தில்லை. நான் பிரசங்கித்துள்ள சபைகளில் பெரும் பாலானவை சிறிய சபைகளேயாகும். நான் எனது தொழிலைச் செய்து எனது தேவைகளைப் பொதுவாக நிறைவேற்ற வேண்டியதாய் இருந்தது. நான் எனது பதிவேடுகளைச் சரியாகப் பராமரிப்பதில்லை என்ற ஐயம்*

*எனக்குண்டு (நான் யார் யாருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் என்பதைக் கூட மறந்து விட்டேன்).*

*பல நகரங்களில் இருந்த மார்க்கத் தலைவர்களுடன் நான் நன்கு ஒத்துப் போக முடியாதிருந்தது. உண்மையில், அவர்களில் சிலர் என்னைப் பயமுறுத்தினார்கள், நீதிமன்றத்திற்கு என்னை அழைத்துச் சென்றார்கள், மற்றும் எனது சரீரத்தைத் தாக்கினார்கள். பல இடங் களில், எனது ஊழியமானது கலகங்களையும் தொந்தரவு களையும் ஏற்படுத்தியதால், அந்தந்த நகரத்தை விட்டு அவசரமாய் நான் புறப்பட்டுப் போக வேண்டிய தாயிற்று. மூன்று அல்லது நான்கு முறை நான் சிறையில் கூட இருந்துள்ளேன், ஆனால் அது தவறெதுவும் செய்ததற்காக அல்ல.*

*நீங்கள் என்னைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தால், நான் எனது வேலையைச் செய்து கொண்டே சுயவுதவி யுடன் உங்களுக்குச் சிறந்த வகையில் ஊழியக்காரனாய் இருப்பேன் என்று உறுதி கூறிக் கொள்ளுகிறேன்.*[1]

இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு, உறுப்பினர்கள் இவர் மேல் ஆர்வம் கொண்டுள்ளார்களா என்று மூப்பர் அவர்களைக் கேட்டார். அவர்கள் யாவரும், அங்கிருந்த சபைக்கு அவர் ஒரு பொழுதும் தேவையில்லை என்று ஒருமனதாய்க் கூறினார்கள். உடல் நலமில்லாது, சண்டை செய்கின்ற, தொந்தரவு ஏற்படுத்து கின்ற, முன்னாள் கைதியான ஒருவர் தங்கள் பிரசங்கியாராய் இருப்பதை அவர்கள் விரும்பவில்லை மற்றும் அந்த விண்ணப் பம் அவர்கள்முன் வைக்கப்பட்டதையே அவர்கள் அவமான மாய் நினைத்தார்கள். இருப்பினும் ஒருவர், அந்தப் பிரசங்கி யாரின் பெயரைக் கேட்டார். உடனே மூப்பர் "அப்போஸ் தலராகிய பவுல்" என்று பதில் அளித்தார்.

நடபடிகளின் கடைசி ஏழு அதிகாரங்களில் பவுல் ஒரு "சிறைப் பறவையாக" கூறப்படுகின்றார், அவர் ஒரு குற்றவாளி என்றெண்ணப்பட்டு - எருசலேமில் சில நாட்களும் (22:24), பிறகு செசரியாவில் இரண்டு வருடங்களும் (23:33-35; 24:27), தொடர்ந்து ரோமாபுரியில் குறைந்தது இரண்டு வருடங்களும் (28:16, 30) சிறையில் வைக்கப்பட்டார். சிறை வாழ்க்கைக்குப் பவுல் அந்நியரல்ல, அவர் அடிக்கடிச் சிறையில் அடைக்கப் பட்டிருந்தார் (2 கொரி. 11:23). பவுலும் அவரது உடன் ஊழியக் காரரும் பிலிப்பி நகரில் அடிக்கப்பட்டு, தொழு மரத்தில்

கட்டப்பட்டதைப் பற்றிய ஒரு சிறையிருப்பை நாம் படித்தோம் (அப். 16). இருப்பினும் இதற்குமுன் ஒரு பொழுதும் இந்த அப்போஸ்தலர் நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம், வருடத்துக்கு வருடம் இப்படிப் பட்ட எல்லைக்குட் படுத்தப்படுதலைச் சகித்திருந்ததில்லை. அவர் செயல்படும், தீவிரமான வாழ்க்கையொன்றை வாழ்ந்து வந்ததால், பவுல் அனுபவித்தவைகளிலேயே மாபெரும் விசாரணைகளில் ஒன்றாக இது விளங்கிற்று. இருப்பினும், நாம் இந்த அதிகாரங்களைப் படிக்கையில், பவுல் தமது விசாரணை முழுவதிலும் காத்துக் கொண்டிருந்த நேர்மறையான, மேற் துடிப்புள்ள எண்ணப் போக்கை நாம் காண வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.[2]

நமது முந்திய பாடத்தில், பவுல் செசரியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, தேசாதிபதியாகிய பேலிக்ஸிடம் ஒப்புவிக்கப்பட்டதையும், அவர் இவரை (பவுலை) ஏரோதின் அரண்மனையில் காவலில் வைத்ததையும் நாம் கண்டோம் (23:23-35). இந்தப் பாடமானது - பவுல் சிறைச்சாலையில் இருந்த ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களில் சந்தித்த பல விசாரணைகளில் ஒன்றான - செசரியாவில் பவுலின் முதல் விசாரணையைப் பற்றியதாகும்.[3] பவுல் தாக்கப்பட்டுப் பழி கூறப்பட்டிருந்த போதும் "தைரியமாய்" (24:10) இருக்கத் தம்மை மேலான்மை செய்து கொண்டார்.

## போலியான வெளித்தாக்குதல் (24:1-9)

எருசலேமுக்கு வெளியே பவுல் பாதுகாப்பாய் இருந்த போது, சேனாதிபதி, சனகெரீன் சங்கத்தாரிடம் பவுல் என்ற அக்கைதி செசரியாவுக்குக் கூட்டிச் செல்லப்பட்டு விட்டதாக கூறினார். அந்த அதிகாரி அநேகமாக மிகுந்த திருப்தியுடன் அவர்களிடத்தில், அவ்விஷயத்தை அவர்கள் தொடர்ந்து கையாள விரும்பினால் அவர்கள் செசரியாவுக்குச் சென்று தங்கள் புகாரை தேசாதிபதியாகிய பேலிக்ஸிடம்[4] எடுத்துரைக்க வேண்டும் என்று கூறினார். யூதத் தலைவர்கள், தங்கள் பிடியில் இருந்து பவுல் மறுபடியும் தப்பிச் சென்றதை அறிந்து

ஆத்திரப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவர்கள் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராய் இருந்ததில்லை. சில நாட்களுக் குள்ளாகவே அவர்கள் அவரை (பவுலை) நீக்கிப்போட முயற்சி செய்வதற்கு மறுபடியும் தயாரானார்கள்.

"ஐந்து நாளைக்குப் பின்பு[5] பிரதான ஆசாரியனாகிய அனனியா[6] மூப்பர்களோடும் தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியனோடும்[7] கூட (செசரியாவுக்கு)ப் போனான்,[8] அவர்கள் பவுலுக்கு விரோதமாய்த் தேசாதிபதியினிடத்தில் பிராது பண்ணினார்கள்" (வ. 1). வயதான ஆசாரியராகிய அனனியா செசரியாவுக்கு அறுபத்தி ஐந்து மைல்களுக்கும் அதிகமான தூரம் பயணம் செய்வது பற்றி மகிழ்ச்சியற்று இருந்திருக்கலாம், ஆனால் பவுலைக் கொலை செய்வதற்காக அவர் எவ்வித வசதிக் குறைவையும் அனுபவிக்கத் தயாராக இருந்தார். அவரும் மற்ற முன்னோடிகளும் தங்கள் வழக்கை எடுத்துரைப்பதில் தெர்த்துல்லு என்ற பெயருடைய திறமை பெற்ற பேச்சாளரின் உதவியை உறுதிப் படுத்திக் கொண்டார்கள். அவர்கள் இதை, (1) ரோமச் சட்டத்தில் அவர்களைக் காட்டிலும் தெர்த்துல்லு அதிகப் பழக்கமுள்ளவராய் இருந்ததாலும் (2) அந்த வேளையில் கூறப்பட வேண்டிய நயமான பேச்சுகளைப் பொறுத்தமட்டில் தாங்கள் அதை நன்கு செய்யத் தவறி விடுவோம் என்பதாலும் இவ்வாறு ஏற்பாடு செய்திருக்கலாம்.

அவர்கள் செசரியாவை அடைந்த பிறகு யூதேயாவுக்கான ரோம தேசாதிபதி(அதிகாரி)யாயிருந்த அந்தோனியஸ் பேலிக்ஸின் முன்னிலையில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். பவுல் உள்ளே அழைக்கப்பட்ட பிறகு (24:2அ), தெர்த்துல்லு, பேலிக்ஸிடம் "குமட்டல் உண்டாக்கும் போலிப் புகழ்ச்சி யுடன்"[9] பேசத் தொடங்கினார்:

> தெர்த்துல்லு குற்றஞ்சாட்டத் தொடங்கி: கனம் பொருந்திய பேலிக்ஸே, உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அநுபவிக்கிறதையும், உம்மு டைய பராமரிப்பினாலே இந்தக் தேசத்தாருக்குச் சிறந்த நன்மைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கிகாரம் பண்ணுகிறோம் (வ. 2ஆ, 3).

உண்மையில் பேலிக்ஸ், பல கலகக்காரர்களைக் கீழே

தள்ளியிருந்தார்; ஆனால் சாதாரண யூதர்களைக் கூட ஆத்திரப்படுத்தும் வகையில் அதை அவர் மிருகத்தனமாகச் செய்திருந்தார். யூதேயாவில் உள்ள பெரும்பான்மையான குடிமக்கள், சமாதானம் ஏதாவது நிலவியதென்றால் அது அவர் (பேலிக்ஸ்) மூலமாய் உண்டானதல்ல மாறாக அவர் இல்லாமல் உண்டானதுதான் என்று கூறுவார்கள். இருப்பினும் பேலிக்ஸ் ஒரு நியாயாதிபதியாகவும், வழக்கறிஞராகவும் இருந்தார் - மற்றும் தெர்த்துல்லு எதிர்க்கட்சியை வெல்லுவதற்கு எதை வேண்டுமானாலும் கூறுவார்.

மென்மையான நாவுடைய வழக்கறிஞர் தொடர்ந்தார்: “[பாராட்டுக்கள் தேசாதிபதியை அலட்டக்கூடியவை என்பது போல!] உம்மை நான் அநேக வார்த்தைகளினாலே அலட்டாத படிக்கு, நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை நீர் பொறுமை யாய்க் கேட்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்” (வ. 4). பிறகு தெர்த்துல்லு, பவுலுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டு களைக் கொண்டு வந்தார் - அவர் கூறிய பொய்ப் புகழ்ச்சி களைப் போலவே இக்குற்றச்சாட்டுகளும் போலியானவை களாகவே இருந்தன:

முதலாவதானது ஒரு தனிப்பட்ட குற்றச்சாட்டு ஆகும்: “என்னவென்றால், இந்த மனுஷன் கொள்ளை நோயாகவும் ...” (வ. 5அ) - இது நேரடியாக “ஒரு கொள்ளை நோய், ஒரு கிருமி நோய்!” என்றாகின்றது! வேறு வார்த்தைகளில் சொல்லுவ தென்றால், “பவுல் கலக மூட்டுவதில் முதல் நபராவார், சரியான எண்ணம் கொண்ட எந்த ஒரு நபரும் இவ்வகைப்பட்டவரை உயிருடன் இருக்க அனுமதிப்பதில்லை!” என்பதாகும்.

அடுத்ததாக அரசியல் ரீதியான ஒரு குற்றச்சாட்டு வந்தது: “பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிற வனாகவும், நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று கண்டறிந்தோம்” (வ. 5ஆ). இது பேலிக் ஸுக்கும் மாபெரும் ஆர்வமூட்டிய ஒரு குற்றச்சாட்டாய் இருந்திருக்கும், ஏனெனில் சமாதானத்தைக் காக்கும்படியா கவே அவர் ரோம அரசினால் கட்டளையிடப் பட்டிருந்தார். இந்தக் குற்றச்சாட்டில் உண்மையின் கூறு ஒன்று இருந்தது, ஏனெனில் பவுல் இருந்திருந்த பல இடங்களில் கலகங்கள் ஏற்பட்டிருந்தது.[10] இருப்பினும், பவுல் கலகத்தைத் தூண்டி யிருந்தார் என்று மறைமுகமாய்க் கூறியது உண்மையற்றதாக

*இருந்தது.*

*‘‘நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கின்றான்’’ என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். வேத வசனங்களில் கிறிஸ்தவர்களை இந்த ஒரு இடத்தில் மட்டுமே “நசரேயர்கள்’’ என்று குறிப்பிடப்படுகின்றது. இது “நசரேய னாகிய இயேசுவைப் பின்பற்றுபவர்கள்’’ என்று அர்த்தப்படுத்த யூதர்கள் பயன்படுத்திய ஒரு இயற்பெயராக இருந்தது.*[11] *அது ஒரு கேலிக் கூத்தான சொற்றொடராயிருந்தது: “நாசரேத்தி லிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா?’’ (யோவா. 1:46ஆ). புறக்கணிக்கப்பட்டிருந்த இந்தக் குழுவை “மத பேதம்’’ என்று தெர்த்துல்லு அழைத்தால், அவர் அநேகமாக, கிறிஸ்தவம் என்பது சட்ட விரோதமான மார்க்கம்.*[12] *எனவே அது ரோம அரசால் நீக்கப்பட வேண்டும், என்ற கருத்தைக் கூறியிருக்கலாம்.*

*இறுதியாக, அந்த வழக்கறிஞர், பக்தியான (அதாவது, மார்க்க ரீதியான) குற்றச் சாட்டொன்றைக் கூறினார்: “இவன் தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தப் பார்த்தான்’’ (அப். 24:6அ). தொடக்கத்தில், ஆசியா நாட்டிலிருந்து வந்திருந்த யூதர்கள், பவுல் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தியதாகக் கூச்சலிட்டிருந் தார்கள் (21:28); இப்பொழுது அந்தக் குற்றச்சாட்டு “இவன் தேவாலயத்தையும் தீட்டுப் படுத்தப் பார்த்தான் ...’’ என்று மென்மைப்படுத்தப்பட்டிருந்தது - இது நிரூபிப்பதற்கோ அல்லது நிரூபிக்காமல் இருப்பதற்கோ கடினமானதொரு தெளிவற்ற குற்றச்சாட்டாக இருந்தது. முன்பே குறிப்பிட்ட படி, தேவாலயத்தை அசுத்தப்படுத்துகின்ற எவரையும் மரணத் திற்குட்படுத்த தேவாலய அதிகாரிகளுக்கு ரோம அரசு உரிமை கொடுத்திருந்தது.*[13]

*தெர்த்துல்லு கூடுதலாகப் பின்வருமாறு கூறினார்:*

> *நாங்கள் இவனைப் பிடித்து [எங்கள் வேதப் பிரமாணத் தின்படியே நியாயந்தீர்க்க மனதாயிருந்தோம். அப்பொழுது சேனாதிபதியாகிய லீசியா வந்து, மிகுந்த பலாத்காரமாய் இவனை எங்கள் கைகளிலிருந்து பறித்துக் கொண்டு போய், இவன் மேல் குற்றஞ் சாட்டுகிறவர்கள் உம்மிடத்தில் வரும்படி கட்டளையிட்டார்] (வ. 6ஆ-8அ).*

*அதிகாரம் 22ல் காணப்பட்ட கும்பலின் காட்சியானது நல்ல விசாரணைக்குத் தயாரான ஒரு முறையான கைது செய்தல் என்று குறிப்பிடுவது கடினமாகும்! வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், "பவுல் கைது செய்யப்பட்டது பற்றிய லூக்காவின் விபரங்களை (அப். 21:27-40) நீங்கள் சேனாதிபதியின் விபரங்களோடும் (அப். 23:25-30) மற்றும் வழக்கறிஞர்களின் விபரங்களோடும் (அப். 24:6-8) ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் ஏன் குழப்பமடைய முடியும் என்று நல்ல முறையில் புரிந்து கொள்ள முடியும்'' என்று கூறினார். யூதர்கள் பவுலைக் கொலை செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கையில், லீசியா சென்று அவர்களிடமிருந்து பவுலை மீட்க வேண்டியதாயிற்று என்று லீசியாவிடமிருந்து வந்த கூற்றை பேலிக்ஸ் தம்மிடம் கொண்டிருந்தார் என்பதை அந்த வழக்கறிஞர் அறியாமல் இருந்தார் (23:27).*

*வசனம் 24:6 "எங்கள் ..." என்ற வார்த்தைக்கு முன்னும், வசனம் 8ல் "கட்டளையிட்டார்" என்பதற்குப் பின்னும் உள்ள அடைப்புக் குறிகளைக் கவனியுங்கள். வசனம் 6ன் முடிவுப் பகுதியும், வசனம் 7 முழுவதும் மற்றும் வசனம் 8ன் தொடக்கப் பகுதியும் பல கையெழுத்துப் பிரதிகளில் உள்ளடங்கவில்லை. இந்த வாசிப்பின் உண்மைத் தன்மைக்கு வசன ஆதாரம் போதுமான அளவில் இல்லாததால், பல மொழிபெயர்ப்புக் களில் இதை உள்ளடக்காமல், அடைப்புக் குறிக்குள்ளோ, அடிக்குறிப்பு முதலியவற்றிலோ கீழ்ப்படுத்தப்பட்டுள்ளன. சைமன் கிஸ்ட்மேக்கர் அவர்கள் நடபடிகளின் தமது விளக்க வுரையில், தம்முடைய சொந்த மொழிபெயர்ப்பைப் பற்றி, "மேற்கத்திய வாசிப்பானது அதிகாரமுடைமையின் வளைய மொன்றைப் பெற்றுள்ளது. ஆகையால், அதன் உள்ளடக்கு தலை நீக்க நான் விரும்பவில்லை ஆனால் சட்டமுறைப்படி நான் அதை அடைப்புக் குறிக்குள் வைத்துள்ளேன்'' என்று விளக்கினார். F.F. புரூஸ் அவர்கள், "மேற்கத்தியக் கூடுதலின் நடையானது தெர்த்துல்லுவின் எஞ்சிய பேச்சுடன் மிகவும் ஒத்திசைவதால், அது உண்மையானது என்று ஒப்புக் கொள்ளும்படி சாய நேரிடுகின்றது" என்று ஒப்புக் கொண்டார்.*

*பவுலுக்கு எதிராகத் தேசாதிபதி தப்பெண்ணம் கொள்வ தற்குத் தம்மால் முடிந்த அளவு சிறந்ததைச் செய்த தெர்த்துல்லு தமது உரையை இவ்விதமாய் முடித்தார்: "இவனிடத்தில் நீர்*

*விசாரித்தால் நாங்கள் இவன் மேல் சாட்டுகிற குற்றங்கள் யாவையும் அறிந்து கொள்ளலாம் என்றான்'' (வ. 8ஆ). அடைப்புக் குறிக்குள் உள்ள வசனப் பகுதியானது நீக்கப் பட்டால், தெர்த்துல்லு பவுலைப் பரிசோதிக்கும்படி குறிப்பிட் டார்,[14] அவ்வசனப் பகுதியானது உள்ளடக்கப்பட்டால் அவர் தெர்த்துல்லுவைப் பரிசோதிக்கும்படி குறிப்பிட்டார். இரு வழிகளிலும் அந்த வழக்கறிஞர், பேலிக்ஸ் உண்மைகள் யாவற் றையும் அறியும் பொழுது அவர்கள் சார்பிலேயே இருப்பார் என்று விளக்கப்படுத்தினார்.*

*அந்த வேளையில், பிரதான ஆசாரியரும், மூப்பர்களும் தங்கள் குரல்களைச் சேர்த்தார்கள். ''யூதர்களும் அதற்கு இசைந்து, இவைகள் யதார்த்தந்தான் என்றார்கள்'' (வ. 9).*

## *சந்தோஷமான தற்காப்பு வாதம் (24:10-21)*

*தேசாதிபதி, பவுலை விசாரிக்க வேண்டுமென்று யூதர்கள் விரும்பியிருந்தால், அவர்கள் அதில் ஏமாற்றம் அடைந்தார்கள். அதற்குப் பதிலாக, தேசாதிபதி, "பவுல் பேசும்படி ... சைகை காட்டி''னார் மற்றும் பவுல் தமது பதிலுரையைத் தொடங் கினார் (வ. 10அ).*

*போலிப் புகழ்ச்சியுடன் தொடங்குவதற்குப் பதிலாக (1 தெச. 2:5அ), யூதர்களைக் கையாளுவதில் பேலிக்ஸுக்கு உள்ள அனுபவத்தை மட்டும் பவுல் குறிப்பிட்டார்: "நீர் அநேக வருஷ காலமாய் இந்தத் தேசத்தாருக்கு நியாயாதிபதி யாயிருக்கிறீரென்றறிந்து, நான் என் காரியங்களைக் குறித்து அதிக தைரியத்துடன் உத்தரவு சொல்லுகிறேன்" (வ. 10ஆ).[15] கர்த்தருடைய உதவியுடன் அந்த அப்போஸ்தலர் நடுக்கமின்றி, சூழ்நிலையை தமக்குக் கீழ்ப்படுத்தினார். இயேசு பின்வருமாறு வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார்:*

> *... அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெப ஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக் கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள். ஆனாலும் அது*

> *உங்களுக்குச் சாட்சியாவதற்கு ஏதுவாயிருக்கும் … உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர் பேசவும் எதிர் நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன் (21:12-15).*

*இப்பொழுது பவுல் தேசாதிபதி முன்பு நின்றபொழுது, அந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டார்.*

*முதலாவதாகப் பவுல் தாம் ஒரு கலகக்காரர் என்ற குற்றச் சாட்டுக்குப் பதில் கொடுத்தார்: "நான் தொழுதுகொள்ளும் படியாக[16] எருசலேமுக்குப் போனது முதல் இதுவரைக்கும் பன்னிரெண்டு நாள் மாத்திரம்[17] ஆயிற்றென்று நீர் அறிந்து கொள்ளலாம்" - கலகத்திற்குக் காரணமாயிருக்க அல்ல (வ. 11). பன்னிரண்டு நாட்கள் என்ற தனிக்குறிப்பானது பவுல் ஒரு கலகத்தைத் திட்டமிட்டுச் செயல்பட போதுமான காலமா யிருக்கவில்லை மற்றும் அந்த நிகழ்ச்சிகள் குறுகிய காலத்திற்கு முன்பு தான் நடந்திருந்ததால், உண்மையில் நடந்திருந்தது என்ன என்பதைக் கண்டறிய சாட்சிகளைக் காண்பதில் பிரச்சனை எதுவும் பேலிக்ஸுக்கு இராது என்பதையும் காட்டியது.*

*பவுல், "தேவாலயத்திலே நான் ஒருவரிடத்திலாவது தர்க்கம் பண்ணினதையும், நான் ஜெப ஆலயங்களிலாகிலும் நகரத்திலா கிலும் ஜனங்களுக்குள்ளே கலகமெழுப்பினதையும், இவர்கள் கண்டதில்லை" (வ. 12) என்று கூடுதலாகச் சொன்னார். எருச லேமில் பவுல் வழக்கத்திற்கு மாறாக அதிகம் பேசாமல், தாம் அங்கு வந்தது தொந்தரவாயிருக்கும் என்று நினைத்த எருசலேம் மூப்பர்களைச் சாந்தப்படுத்த முயற்சி செய்து கொண்டிருந் திருக்கலாம் (21:22).[18]*

*பிறகு பவுல் தம்மீது குற்றம் சாட்டியவர்களை அவ்விடத் தில் நிறுத்தினார்: "இப்பொழுது என்மேல் சாட்டுகிற குற்றங் களை இவர்கள் நிரூபிக்கவுமாட்டார்கள்" (வ. 13). ஆலோ சனைச் சங்கத்தார் தாங்கள் ஏற்படுத்திய குற்றச்சாட்டுகள் பற்றிய நேரடியான அறிவைப் பெறாதிருந்தார்கள்; அவர்கள் வதந்தியின் அடிப்படையிலேயே செயல்பட்டார்கள். அவர்கள் சாட்சிகள் எவரையும் கூட்டி வராமல், மென்மையான நாவு டைய பேச்சாளர் ஒருவரையே கூட்டி வந்தார்கள். குற்றச் சாட்டானது ஆதாரமாகாது.*

*இருப்பினும் பவுல் ஒரு குற்றச்சாட்டுக்குத் தான் குற்ற*

வுணர்வுடன் இருந்ததாகக் கெஞ்சினார்: அவர், தாம் ஒரு கிறிஸ்தவர் ஒன்று ஒப்புக் கொண்டார். "உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக் கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், இவர்கள் மதபேதம்[19] என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து" (வ. 14அ). "எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு" என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். அவர், ''எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசித்து'' (வ. 14ஆ) என்று கூறினார். அவர் யூதர்களின் வேதவசனங்களைப் புறக்கணித்திருந்ததில்லை; உண்மையில் அவர் வரப் போகும் மேசியா மற்றும் இராஜ்யம் ஆகியவற்றைப் பற்றி அந்த வசனங்கள் முன்னுரைத்ததை விசுவாசித்தார். "பவுலும் ஆதி கிறிஸ்தவர்களும் தங்களை 'முந்தின யூதர்கள்' என்றல்ல ஆனால் 'நிறைவேறிய யூதர்கள்'"[20] அதாவது ஆபிரகாமின் உண்மையான சந்ததியார்கள் (கலா. 3:29) என்பதாகவே கண்டார்கள்.

"தீர்க்கதரிசிகளின் புத்தகங்களில் எழுதியிருக்கிறவைகள்" பற்றி அவர், "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறதுபோல நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்"[21] (வ. 15) என்று கூடுதலாகக் கூறினார். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் உயிர்த்தெழுதல் பற்றிப் பேசியிருந்தார்கள் (தானி. 12:2, 3ஐக் காணவும்). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சதுசேயர்கள் நம்பாதிருந்ததால், அங்கு வந்திருந்தவர்களில் சில மூப்பர்கள் பரிசேயர்களாய் இருந்தார்கள் என்பது உறுதியாகும், அவர்கள் உயிர்த்தெழுதலை நம்பினார்கள். இவ்விதமாகப் பவுல், "... இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது போலவே ...'' என்று பேச முடிந்தது.[22]

உயிர்த்தெழுதல் என்ற கருத்தானது, தேவனுக்கு முன்பாக எல்லாரும் நின்று கணக்கொப்புவிக்கும் நாளாகிய மதிப்பிடும் நாளை குறித்து முன் அனுமானிக்கின்றது. இவ்விதமாகப் பவுல், ''இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்"[23] (வ. 16) என்று கூறினார். வேறு

வார்த்தைகளில் கூறுவதென்றால், "பேலிக்ஸே, உம் முன்பாக நான் குற்றமற்ற ஒரு மனிதனாக நிற்கின்றேன்!" என்று அவர் கூறினார்.

ஒரு குற்றச்சாட்டு இன்னும் பதில் அளிக்கப்படாதிருந்தது, அது அவர் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்த முயன்றதாகக் கூறப்பட்ட குறிப்பான குற்றச்சாட்டு ஆகும். உண்மையில் நடந்தது என்ன என்பதைப் பற்றிய தம் விளக்கத்துடன் பவுல் தொடங்கினார்: "அநேக வருஷங்களுக்குப் பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப் பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கை களைச் செலுத்தவும் வந்தேன்" (வ. 17). பவுல் கொண்டு வந்த நன்கொடையானது குறிப்பிட்ட யூதர்களுக்கு (எருசலேமில் இருந்த கிறிஸ்தவ யூதர்களுக்கு) - எப்படியிருப்பினும் யூதர் களுக்கு - ஆனதாகும், எனவே அவர் தர்மப் பணத்தைத் தமது "ஜனத்தாருக்கு" கொண்டு வந்ததாகக் கூறிய கூற்று சரியான தேயாகும். பேலிக்ஸ் "தர்மப் பணத்தை" மற்றும் "காணிக்கை களை"[24] என்ற சொற்றொடர்களைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். இந்த யூதர் பொருள்கள் மற்றும்/அல்லது செல்வாக்கு உடைய மனிதராயிருந்தார்; ஒருவேளை அவர் அதிகமான பணத்தைத் தம் கைகளில் கொடுக்க முடியும் என்று அவர் நினைத்தார் என்பது உறுதி (வ. 26ஐக் கவனிக்கவும்)!

பவுல் தொடர்ந்தார்: "அப்பொழுது கூட்டமில்லாமலும் அமளியில்லாமலும் தேவாலயத்திலே சுத்திகரித்துக் கொண்டவ னாயிருக்கையில் [வசனம் 21:26ஐக் கவனிக்கவும்]" (வ. 18அ). அந்த உண்மைகளை தேவாலயப் பதிவேடுகளில் சரி பார்க்க முடியும். "ஆசியா நாட்டாரான சில யூதர்கள் என்னைக் கண்டார்கள். அவர்களுக்கு என் பேரில் விரோதமான காரியம் ஏதாகிலும் உண்டாயிருந்தால், அவர்களே இங்கு வந்து, உமக்கு முன்பாகக் குற்றஞ் சாட்ட வேண்டும்" (வ. 18ஆ, 19). ஆசியா நாட்டு யூதர்களே பவுல் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்திய தாகத் தொடக்கத்தில் குற்றம் சாட்டியிருந்தார்கள் (21:27, 28); அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையாயிருந்திருந்தால், வழக்கிற் குச் சாட்சிகளாக அவர்கள் வந்திருக்க வேண்டும். தமக்கெதி ராக அந்த யூதத் தலைவர்கள் கொண்டு வந்திருந்த குற்றச் சாட்டுகளை நிரூபிக்க முடியாது என்பதை மறுபடியும் நிலை நாட்டினார் (வ. 13).

சனதெரீன் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு எதிரான ஒரு

நேரடி அறைகூவலுடன் பவுல் உரையை முடித்தார்:

> நான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது அவர்கள் யாதொரு அநியாயத்தை என்னிடத்தில் கண்டதுண்டானால் இவர்களே அதைச் சொல்லட்டும். நான் அவர்களுக்குள்ளே நின்றபோது மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பதைக் குறித்து, இன்று உங்களாலே நியாயந்தீர்க்கப்படுகிறேனென்று நான் சொன்ன ஒரு சொல்லினிமித்தமேயன்றி வேறொன்றினிமித்தமும் குற்றங் காணப்படவில்லையென்றான்[25] (வ. 20, 21).

பிரதான ஆசாரியர் மற்றும் மூப்பர்களின் முகங்கள் சங்கடத்தினாலும் கோபத்தினாலும் சிவந்து போனதை என்னால் காண முடிகின்றது. சங்கத்தாரின் முன்பாகப் பவுல் நின்றபோது, அவர் எந்த ஒரு பிரமாணத்தையும் மீறினார் என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருந்ததில்லை.[26] மாறாக, "மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன்" என்று பவுல் சத்தமிட்டுக் கூறியிருந்த பிறகு, சங்கத்தார் வன்முறையில் ஈடுபட்டிருந்தார்கள் (23:6-10ஐக் காணவும்). பவுலுக்குக் கூறுவதற்குப் பதிலெதுவும் அவர்களிடம் இல்லை, குறைந்தபட்சம் பேலிக்ஸ் முன்பாக வார்த்தை கூற அவர்களில் எவரும் அக்கறை எடுத்ததில்லை.

பவுல் தம்மேல் குற்றம் சாட்டியவர்கள் முன்பாக வெற்றியாளராய் நின்று, தேசாதிபதியின் முடிவுக்காகக் காத்திருந்தார். அவர் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## சமாதானப்படுத்தும் முடிவு (24:22, 23)

பேலிக்ஸ் தமது கைகளில் ரோம சேனாதிபதியான கிலவுதியு லீசியாவின் அறிக்கையை வைத்திருந்தார் என்பதை யூதத் தலைவர்கள் அறியாதிருந்தார்கள் என்று முன்னரே நான் குறிப்பிட்டேன். தேசாதிபதி கிறிஸ்தவம் பற்றிச் சற்றுப் புரிந்து கொள்ளுதலுடன் இருந்தார் என்பதையும் அவர்கள் உணராதிருந்தார்கள். பேலிக்ஸ், "இந்த மார்க்கத்தின் விஷயங்களை

*விவரமாய் அறிந்திருந்தார்" (வ. 22) என்று லூக்கா கூறினார். "மார்க்கம்" பற்றி பேலிக்ஸ் அறிந்திருந்தது எவ்விதம் என்பதை லூக்கா கூறவில்லை. ஒருவேளை, கொர்நேலியு என்ற பெயருடைய ஒரு ரோம அதிகாரி (10:1-48) தமது நம்பிக்கையைத் தேசாதிபதியினிடத்தில் பகிர்ந்து கொண்டிருக்கலாம். ஒரு வேளை சுவிசேஷகனான பிலிப்பு "இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்திருந்ததால்" (8:35) பேலிக்ஸ் கேள்விப்பட்டிருந்திருக் கலாம் (8:40; 21:8). ஒருவேளை, தேசாதிபதி என்ற முறையில் என்ன நடக்கின்றது என்பதைத் தாம் கவனித்தது தமது பணி யென்று மட்டும் அவர் இதைக் கூறியிருக்கலாம். எப்படி யிருப்பினும் பேலிக்ஸ் இதைப் பற்றிப் பெற்ற அறிவானது அவரது இருதயத்தையடையாமல், அவரது மூளையை மட்டுமே அடைந்திருந்தது என்பது உறுதி. "அவர் ஒளியைக் கண்டிருந்தார், ஆனால் இருளிலே வாழ்வதைத் தேர்ந்து கொண்டார்."*

*அவரது அறிவானது அவருடைய வாழ்வை மாற்றா திருந்தாலும் கூட, யூதர்களின் கருத்துக்கு அவர் இசைந்து செல்வதிலிருந்து அவரைப் பாதுகாத்தது. "மரணத்துக்காவது விலங்குக்காவது" ஏற்ற குற்றமொன்றும் பவுலிடத்தில் காணப் படவில்லை (23:29) என்பது தெளிவாயிற்று, அவர் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்,[27] ஆனால் தேசாதிபதி நீதி செய்வதைக் காட்டிலும் யூதருக்குத் தயவு செய்வது பற்றி அதிக அக்கறையாயிருந்தார் (24:27ஐக் கவனிக்கவும்). மேலும், அவர் ஏற்கனவே தமது பேராசை கொண்ட கைகளைப் பவுல் குறிப்பிட்டிருந்த நிதியில் வைப்பது எப்படி என்பதைக் குறித்து ஆராய்ந்து கொண்டிருந்தார் (வ. 26ஐக் கவனிக்கவும்).*

*ஆகையால் பேலிக்ஸ், "சேனாதிபதியாகிய லீசியா வரும் போது உங்கள் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பேன்" (வ. 22ஆ) என்று கூறி யூத முக்கியஸ்தர்களை அமர்த்தினார். பேலிக்ஸ் லீசியாவை அழைத்தார் என்றோ அல்லது அந்த சேனாதிபதி இந்த வழக்கு விசாரணைக்காக எப்பொழுதாவது செசரியாவுக்கு வந்தார் என்றோ எவ்விதச் சுட்டிக்காட்டுதலும் தரப்படவில்லை. தேசாதிபதியின் வார்த்தைகள் அவர் தம் முடிவை மேற்கொள்ளாததற்கு ஒரு காரணமாக, தள்ளிப் போடுவதற்கு ஒரு சாக்குப் போக்காக இருந்தன. பேலிக்ஸ் விஷயங்களைத் தள்ளிப் போடுவதில் விருப்பமுடையவராகக்*

*காணப்பட்டார் (வ. 25ஐக் கவனிக்கவும்). பேலிக்ஸ் இட மாற்றப்படும் வரையிலும் வழக்கை விட்டு விடுவதென்று யூதத்தலைவர்கள் முடிவு செய்தனர் (25:1, 2ஐக் கவனிக்கவும்).*

*அதே வேளையில் பேலிக்ஸ், "பவுலைக் காவல் பண்ணவும், கண்டிப்பில்லாமல் நடத்தவும், அவனுக்கு ஊழியஞ் செய்கிற தற்கும் அவனைக் கண்டு கொள்ளுகிறதற்கும் வருகிற அவனு டைய மனுஷர்களில் ஒருவரையும் தடை செய்யாதிருக்கவும் நூற்றுக்கு அதிபதியானவனுக்குக் கட்டளையிட்டு, அவர் களைக் காத்திருக்கும்படி செய்தான்" (24:23). அப்போஸ் தலரின் சூழ்நிலையானது பின்னாளில் அவர் ரோமாபுரியில் தம்மைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும் படியும் (28:16, 20) ஆனால் "தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்" கொள்ள முடிந்திருந்தபடியும் (28:30) போலவே இருந்தது.*

*அடுத்த இரண்டு ஆண்டுகளையும் இவ்வழியிலேயே செலவிட்டார் (24:27). அந்தக் காலத்தில் பவுல், தேவனுடைய திட்டம் என்னவாக இருந்தது என்று ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். அவர் ரோமாபுரியை நெருங்கியதாகக் காணப்பட வில்லை, நிச்சயமாகவே பயணத்தையும் பிரசங்கித்தலையும் அவர் தவற விட்டுவிட்டார். ஒருவேளை அவர் பின்னாளில் ரோமாபுரியில் செய்தது போல (28:31) தமது சிறையறைக்குள் பிரசங்கம் செய்திருக்கலாம் மற்றும் சில நிருபங்களை எழுதி யிருக்கலாம்.[28] ஒருவேளை அவர் முந்திய இருபது ஆண்டுகளில் பெற்றிருந்த உடல் மற்றும் மனரீதியான உபாதிகளில் இருந்து நிவாரணம் பெறுவதற்கு காலத்தைத் தேவன் அவருக்குக் கொடுத்திருக்கலாம்.*

*இந்த இரண்டாண்டு இடைவெளியானது லூக்கா தமது சுவிசேஷ நூல் மற்றும் நடபடிகளின் முதல் பாகத்தை எழுது வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் அவகாசத்தையும் வாய்ப் பையும் ஏற்படுத்தியிருக்கலாம் என்று எழுத்தாளர்களில் பலர் நினைக்கின்றார்கள்.[29] அந்த நாட்களில் லூக்கா, இயேசுவின் வாழ்விலும், எருசலேம் சபையின் தொடக்க நாட்களிலும் முக்கிய பங்கு வகித்தவர்களில் பலரைப் பேட்டி கண்டிருக்க முடியும் (லூக். 1:3ஐக் கவனிக்கவும்). பவுலுடன் அவர் தமது ஊழியம் மற்றும் பயணங்கள் பற்றி மறு கண்ணோட்டம் காணப் பல நீண்ட மணி நேரங்களைச் செலவிட்டிருக்க*

முடியும். பர்ட்டன் காஃப்மன் அவர்கள் பின் வருமாறு கூறினார்:

> கிறிஸ்தவத்தின் மகிமையுள்ள தொடக்கங்கள் பற்றிய சாட்சியங்களை விசாரித்துப் பேட்டி கண்டது என்று லூக்கா மேற்கொண்ட கடினமான செயல்பாடுகளின் விஷயத்திலே, அப்போஸ்தலரான பவுலினால் அனுபவிக்கப்பட்ட அநீதிகள் யாவும் கிருபையுள்ள அருளிரக்கத்தால் மேற்கொண்டு ஜெயிக்கப்பட்டதென்று ஒருவர் கூறலாம், இந்த நிகழ்ச்சியில் ஏற்பட்ட பாடுகளும் தாமதமும் பிரியமுள்ள வைத்தியனாகிய லூக்காவுக்கு இன்றியமையாத எழுத்துக்கள் எழுதுவதற்கு அவகாசம் அளித்தது.

தேவனுடைய நோக்கங்கள் எவைகளாயிருந்தாலும், பவுல் அவைகளுக்குத் தம்மைப் பொறுமையுடன் கீழ்ப்படுத்தினார். ''கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்'' (பிலி. 4:4) என்பதை அவர் ஒரு சிறையறைக்குள் இருந்து கொண்டு எழுதினார் என்பதை நினைவில் வையுங்கள்.

## முடிவுரை

அந்தோனியோ கோட்டையில் இருந்த நூற்றுக்கு அதிபதி யொருவர் அப்போஸ்தலரை, "காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல்" (23:18) என்று குறிப்பிட்டார். நடபடிகளின் கடைசி ஏழு அதிகாரங்களில் பவுலைப் பற்றி விளக்கப்படுத்த அந்தச் சொற்றொடரே பயன்படுத்தப்படுகின்றது. பவுல் தம்மை, ''கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவன்'' (எபே. 3:1) என்றும் "கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவன்" (எபே. 4:1) என்றும் அழைத்துக் கொண்டார். பவுல் தம்மை ரோமாபுரியின் சிறைக் கைதியென்று கருதாமல், "கர்த்தருக்காகச் சிறைப்பட்டவர்'' என்று கருதினார் என்பதைக் கவனியுங்கள்! கர்த்தர் பவுலை எங்கு இருக்க வேண்டும் என்று விரும்பினாரோ, அங்கு பவுல் இருந்ததாகப் பவுல் நம்பியதால் தமக்குக் கிடைத்தது பற்றிப் பவுல் ஒப்புரவுடன் இருந்தார்; கர்த்தர் மிகச் சிறந்தவற்றை அறிவார் என்றும் எல்லாவற்றையும் செயல்படுத்துவார் என்றும்

அவர் விசுவாசித்தார்!

சில கிறிஸ்தவர்கள் உண்மையாகவே சிறையில் இருக்கின்றார்கள். இன்னும் பலர், சூழ்நிலைகள், அவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சக்திகள் ஆகியவற்றால் சிறைப்பட்டிருப்பதாக உணருகின்றார்கள். நீங்கள் அவ்விதமாய் உணர்ந்தால், பவுலைப் போல உங்கள் சூழ்நிலையில் நீங்கள் ஒப்புரவாயிருக்கின்றீர்களா? அல்லது நீங்கள் மாற்ற முடியாத நிலைகள் குறித்து சலிப்பும் கவலையும் அடைந்திருக்கின்றீர்களா? உங்களால் முடிந்த யாவற்றையும் நீங்கள் செய்த பிறகு, தேவனுடைய கரங்களில் எல்லாவற்றையும் ஒப்புக் கொடுக்க நீங்கள் விருப்பமுள்ளவர்களாயிருக்கின்றீர்களா?

டெக்ஸாஸின் வீனஸில் உள்ள சிறைக் கைதிகளிடத்திலான எனது ஊழியத்தில், சிறைச் சுவர்களின் பின்னால் கிறிஸ்துவுக்குள் ஆவியிலும் உணர்விலும் விடுதலையாயிருந்த பலரை நான் கண்டேன் (ரோமர் 8:2; கலா. 5:1). சிறைக்கு வெளியே, பாவத்தினால் மற்றும் சொந்த பயங்களினால் (லேவி. 26:17) சிறைப்பட்டிருந்த திரளான கூட்டங்களையும் நான் கண்டிருக்கின்றேன் (ரோமர் 6:17). வாழ்க்கையில் விடுதலையாயிருத்தல் அல்லது சிறைப்பட்டிருத்தல் என்பது அடிப்படையில் மனநிலையைப் பொறுத்ததாகும். கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறவர்கள், "கற்சுவர்கள் ஒரு சிறைச் சாலையையோ இரும்புக் கம்பிகள் ஒரு கூட்டையோ ஏற்படுத்துவதில்லை"[30] என்ற ரிச்சர்ட் லொவேலஸின் வார்த்தைகள் உண்மையானவை என்று காண்கின்றார்கள்.

## பிரசங்கக் குறிப்புகள்

C. புரூஸ் வொயிட் அவர்கள் அதிகாரம் 24ஐ ஒரு பாடத்தில் முடித்துள்ளார்: (1) ஒரு பொய்ச் சாட்சி (வ. 1-9); (2) ஒரு நல்ல பதில் (வ. 10-23); (3) ஒரு உறுதியான பிரசங்கம் (வ. 24, 25); (4) ஒரு பயம் நிறைந்த பதில்செயல் (வ. 25-27) (வெளியிடப்படாத பிரசங்கம்).

வார்ரென் W. வயர்ஸ்ப் அவர்கள் இந்த அதிகாரத்தை முக்கிய பாத்திரங்களின் அடிப்படையில் பிரித்தார்: (1) தெர்த்துல்லு: பொய்க் குற்றச்சாட்டு (வ. 1-9); (2) பவுல்:

*உண்மையான பதில்கள் (வ. 10-21); (3) பேலிக்ஸ்: மதியீனமான மனப்பான்மை (வ. 22-27).* (*The Bible Exposition Commentary,* vol. 1.)

---

குறிப்புகள்

*[1]இக்கடிதமானது பல வெளியீடுகளில், பல வடிவங்களில் வந்துள்ளது. பல நடைகளில் இருந்து தழுவியமைக்கப்பட்டதாக எனது நடை உள்ளது. [2]கர்த்தர் உறுதிப்பாட்டின் செய்தியுடன் அவருக்குத் தோன்றிய பிறகு அவரால் இந்த மனப்பான்மையைக் கொண்டிருக்க முடிந்தது (23:11). "நம்பிக்கை மறுபடியும் தூண்டப்பட்டது" என்ற பாடத்தில் காணவும். [3]எருசலேமில் இருந்த குறுகிய காலமும், ரோமாபுரிப் பயணமும், 28:30க்குப் பிறகு பவுல் சிறையில் செலவிட்ட காலமும் செசரியாவில் இருந்த இரண்டு ஆண்டுகள் மற்றும் ரோமாபுரியில் இருந்த இரண்டு ஆண்டுகள் ஆகியவற்றுடன் சேர்க்கப்படும்போது, மொத்தம் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது ஆகியிருக்க வேண்டும். [4]அப். 23:30க்கான குறிப்புகளைக் காணவும். [5]இது பவுல் செசரியா வந்து சேர்ந்த பின்பு ஐந்து நாட்களுக்குப் பிறகு நடந்திருக்கலாம், ஆனால் இது பவுல் சென்று விட்டார் என்று யூதர்கள் அறிந்ததில் இருந்து ஐந்து நாட்களுக்குப் பின்பு என்றும் இருக்க முடியும். [6]அப். 23:2க்கான குறிப்புகளைக் காணவும். [7]"நியாய சாதுரியன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "பேச்சாளர்" என்ற நேரடி அர்த்தம் கொண்டதாகும். [8]எருசலேம் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 2400 அடி உயரத்தில் இருந்தது; செசரியாவோ கடற்கரையில் இருந்தது. [9]*William Barclay, *இச்சகப் பேச்சு பற்றிய தேவனுடைய மனப்பான்மையை நீதி. 26:28ல் வாசிக்கவும். [10]அப். 13:50; 14:5, 19; 17:5-9, 13; 18:12-16; 19:23-41 ஆகியவற்றைக் காணவும்.*

*[11]மத். 2:23; 21:11; 26:71; மாற். 1:24; லூக். 4:34; 18:37; யோவா. 1:45 ஆகியவற்றைக் கவனிக்கவும். [12]"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 4" இதழில் அப். 18:13க்கான குறிப்புகளைக் காணவும். [13]இந்த இதழில் அப். 21:28, 29க்கான குறிப்புகளைக் காணவும். [14]இது பவுலை "சவுக்கால் அடித்து விசாரிக்க" வேண்டும் (22:24) என்பதற்கான ஒரு குறிப்பென்று மெக்கார்வி நினைத்தார்* (*New Commentary on Acts of Apostles,* vol. 2 [Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 235). *[15]இவ்வார்த்தைகளை அப். 26:2ல் உள்ள கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [16]"தொழுது கொள்ளும்படியாக" என்ற சொற்றொடரானது தேவாலயத்தில் தொழுது கொள்ளுவதையோ, அப்பகுதியில் இருந்த சககிறிஸ்தவர்களுடன் கூடி ஆராதிப்பதையோ அல்லது இவ்விரண்டையுமோ குறிக்கலாம். தாம் எருசலேம் வந்தது சமாதான நோக்கத்திற்குத் தானே தவிர, கலகமூட்டும் நோக்கங்களுக்காக அல்ல என்பதே பவுலின் கருத்தாக இருந்தது. [17]அவர் எருசலேமுக்குப் பன்னிரண்டு நாட்களுக்கு முன் சென்றார் என்பதே இதை எடுத்துக் கொள்ளுகின்ற மிக எளிய வழி முறையாகும். பவுல் செசரியாவுக்கு வந்து ஐந்து நாட்களுக்குப் பிறகு விசாரணை நடைபெற்றதால், பவுல் எருசலேமில் ஏழு நாட்கள் மட்டுமே இருந்திருக்க இது*

இடமளிக்கின்றது. நடந்தவை எல்லாவற்றுக்கும் காலம் போதுமானதல்ல என்பதால், இந்தப் பன்னிரெண்டு நாட்கள் என்பது அவர் எருசலேமில் இருந்த நாட்களை மட்டுமே குறிப்பதாகச் சிலர் நினைக்கின்றனர், அதில் அவர் சிறையில் இருந்த நாட்களும் உள்ளடங்குகின்றன. எவ்வழியிலும், பன்னிரெண்டு நாட்களில் அதிகமான நாட்கள் அவர் சிறையில் தான் இருந்தார், எனவே தொந்தரவு உண்டாகக் காரணமாயிருப்பதற்கு அவர் சொற்ப காலத்தையே பெற்றிருந்தார். [18]பவுல், யாக்கோபு, பேதுரு மற்றும் யோவான் (கலா. 2:9) ஆகியோருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒரு ஒப்பந்தத்திற்கு மதிப்பளித்துக் கொண்டிருக்கவும் வாய்ப்புண்டு. [19]யூதர்கள் கிறிஸ்தவத்தை ஒரு மதபேதம் என்று அழைத்ததாகப் பவுல் கூறினார்; அவர் அப்படி அழைக்கவில்லை. சபை என்பது எப்பொழுதுமே மதபேதமாக இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை (KJVயில் இவ்விடத்தில் “heresy” என்றுள்ளது, ஆனால் அதே கிரேக்க வார்த்தை வசனம் 5ல் “sect” என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது). [20]Wiersbe, இவ்வாறு விளக்கமளிக்கிறார்.

[21]நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் யாவரும் உயிர்த்தெழுதலைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பேசப்பட்டிருந்தாலும் (யோவா. 5:28, 29ஐக் கவனிக்கவும்), பவுல் இவ்விடத்தில் மட்டுமே இதைப் பேசியிருக்கின்றார். வழக்கமாகப் பவுல் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசும் பொழுதோ அல்லது எழுதும் பொழுதோ, நீதிமான்களின் உயிர்த்தெழுதலைப் பற்றி மட்டும் வலியுறுத்துவார் (எடுத்துக்காட்டு: 1 கொரிந்தியர் 15). [22]பிரதான ஆசாரியர் ஒரு சதுசேயராயிருந்தார், மற்றவர்களும் அவருடன் இருந்திருக்கலாம்; ஆனால் தேசாதிபதியின் முன்பாக அவர்கள் பவுலுக்கு அறைகூவல் விடுக்கத் தயங்கினார்கள், ஏனென்றால், பேலிக்ஸ் முன்னிலையில் அவர்கள் ஒன்றுபட்ட அணியினராய் இருக்கவே விரும்பினார்கள். [23]மூலப்பகுதியில் “I exercise myself” என்றுள்ளது (KJVயில் காணவும்). The Cotton Patch Version என்ற மொழிபெயர்ப்பில் “I constantly give myself workouts” என்றுள்ளது. ஆவிக்குரிய “பயிற்சி” என்பது உடற்பயிற்சியைக் காட்டிலும் அதிக முக்கியமானதாகும். [24]“காணிக்கைகள்” என்ற சொற்றொடரானது தேவாலயத்தில் பலிகளைக் குறிப்பிடக் கூடும், ஆனால் மூப்பர்கள் ஆலோசனை கூறும் வரையிலும் (21:23, 24) பவுல் தேவாலயத்தில் பலியெதுவும் செலுத்தும் நோக்கத்தில் இருந்ததில்லை. அப்படி அவர் திட்டமிட்டிருந்தால், அவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற அது அவர்களின் ஆலோசனையைக் காட்டிலும் அதிகமாய்ப் பயன்பட்டிருக்கும். “காணிக்கைகள்” என்ற சொற்றொடரானது யூதக் கிறிஸ்தவர்களுக்குக் கொண்டு வரப்பட்ட அன்பின் காணிக்கையையே குறிக்கின்றது (2 கொரி. 9:12ல் “அநேகர் தேவனை ஸ்தோத்தரிப்பது” என்பது காணிக்கையினால் உண்டாக்கப்படும் என்ற ஒரு நோக்கத்தைக் காணுகின்றோம்). [25]பவுல் தமது கூற்று ‘‘தவறான செயல்’’ என்றோ அல்லது அக்கூற்றுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டோ இருக்கவில்லை. “நான் செய்த ஒரே குற்றம், எனக்குக் கூறப்பட்ட வேலையைச் செய்ததுதான்’’ என்று நான் சொன்னால் எதை அர்த்தப்படுத்துகின்றேனோ அதையேதான் அவர் அர்த்தப்படுத்தினார் - அதாவது அவர், ‘‘என்னிடத்தில் ஒரு குற்றமுமில்லை’’ என்றார். [26]உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொள்வது ஒரு குற்றமென்றால், சங்கத்தில் இருந்த பரிசேயர்கள் எல்லாரும் அக்குற்றத்தைச் செய்தவர்கள் ஆவார்களே! [27]இயேசுவின் விசாரணைகள் மற்றும் பவுலின் விசாரணைகள் ஆகியவற்றிற்கு மத்தியில் இவ்விடத்தில் மீண்டும் ஒரு ஒத்திசைவு காணப்படுகின்றது. இருவருமே குற்றமற்றவர்கள் என்று மறுபடி மறுபடி காணப்பட்டனர், ஆனாலும் விடுதலை செய்யப்படாதிருந்தனர். [28]நாம் அறிந்த வரையிலும் இந்த எழுத்துக்களில் எவையும் பாதுகாத்து வைக்கப்படவில்லை. “சிறை நிருபங்கள்’’ (எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன்)

*செசரியாவிலிருந்து எழுதப்பட்டதாகச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனால் அவைகள் ரோமாபுரியில் இருந்து எழுதப்பட்டன என்பதே மிகவும் ஏற்புடைய கருத்தாக உள்ளது (பிலி. 4:22ஐக் காணவும்). பவுல் செசரியாவில் சிறையிருக்கையில் எபிரெயருக்கு நிருபத்தை எழுதினார் என்றொரு கருத்தும் கூறப்படுகின்றது, ஆனால் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியது யார் என்பது நம்மால் உறுதியாய்க் கூற முடியாதாகையால், இதுவும் ஒரு யூகமாகவே இருக்க வேண்டும். [29]பவுல் எருசலேமை அடைந்தபோது லூக்காவும் அந்த அப்போஸ்தலருடன் இருந்ததால் (21:17), மற்றும் இரு ஆண்டுகளுக்குப் பிறகு பவுல் ரோமாபுரிக்குப் புறப்பட்டபோது (27:1) லூக்கா அவருடன் இருந்ததால், அந்த இரு ஆண்டுகளிலும் லூக்கா அங்கிருந்த பொதுப் பகுதியில் தங்கியிருந்திருக்கலாம் என்ற கருத்து நிலவுகின்றது.* [30]Quoted in Christopher Morley, ed., *The Shorter Bartlett's Familiar Quotations* (New York: Permabooks, 1953), 223.